# திருநங்கையின் முத்தம்

---------------------------------------

தோல்வியில் துவண்டு போயிருந்த என்னை
நிமிர்ந்து உட்கார வைத்தது
ஒரு திருநங்கையின் முத்தம்.
ரயில் பாதையில்
நிராதரவாய்ப் பூத்த ஒரு பூவைப் போன்ற முத்தத்தை
அவள் எனக்கு பரிசளித்தாள்.
ஒரு நிழலைக் காட்டிலும் மிருதுவாக
என்னை அணைத்து
ஒரு தேசப்படத்தில் ஓடும் நதியைப் போல
குறிப்பாலுணர்த்தி
என்னை அவள் காதல் செய்தபோது
மும்பைமஹேஸ்வரி உத்யான்
எட்டு மணி இரவுப் பூங்காவின்
நியான் விளக்கு
மேலும் பளிச்சிட்டது.
அவள் உடுத்தியிருந்த கருப்புப் புடவையில்
பதிக்கப்பட்டிருந்த பளிச்சிடும் மணிகள்
என்னை உறுத்துவதை
அவளால் தாங்க முடியாத அளவுக்கு
அவளது அன்பு
காற்றில் மிதக்கும் ஒரு இறகைப் போல
எடையற்று இருந்தது.
உலகில் இருக்கும் எல்லா கோணல்களையும்
முத்தங்களால் சரி செய்ய
அவள் முயன்று கொண்டே இருந்தாள்
வயிற்றில் பசியோடும்
மனதில் காயங்களோடும்.

- 8 டிசம்பர் 2018

